Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 246

திங்கட்கிழமை
29 ஜூலை 2024

ஆடி 13
வள்ளுவர் ஆண்டு 2055



# ஜனாதிபதி ரணில் தான்

## 2 மில்லியனுக்கும் மேற்பட்ட எமது மக்களுக்கு காணி உரிமை

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கு இலவச காணி உறுதிப் பத்திரங்களை வழங்க எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனூடாக நாட்டு மக்களின் காணி உரிமை உறுதிப்படுத்தப்பட்டு அவர்கள் அபிவிருத்தியடைவதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும் என உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட மக்களுக்கான காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் குறிப்பிட்டார்.

## ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு ரூபா 3000

ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு ரூ.3000க்கான கொடுப்பனவை வழங்க அரசு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கேற்ப, கடந்த ஏப்ரல் மாதத்தில், அதிகரிக்கப்பட்ட ரூ.2,500 சம்பள உயர்வுக்கு மேலதிகமாக இந்த ரூ.3000க்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளது.

## தங்கக் கடன் வட்டி குறைகிறது

இலங்கை மத்திய வங்கி அதன் கொள்கை ரீதியான வட்டி வீதங்களைக் குறைத்துள்ளதால் அடகு வைக்கப்படும் தங்கத்திற்கு இதுவரை அறவிடப்பட்ட வட்டி வீதம் குறைவடையலாம் என நிதி அமைச்சு குறிப்பிடுகின்றது.

அதற்கேற்ப, வணிக வங்கிகள், அனுமதிப்பத்திரம் பெற்ற நிதி நிறுவனங்கள், அங்கீகாரம் பெற்ற அடகு நிலையங்களால் அறவிடப்படும் அடகுக்கான வட்டி குறைக்கப்படும்.

## மின் கட்டணத்திற்கு 22.5% சலுகை

மின் பாவனைக்காக அறவிடப்படும் கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கேற்ப. வீட்டுப் பாவனைத் தொகுதிக்கு 27%த்தாலும், மதத் தலங்களுக்கு 30%த்தாலும், ஹோட்டல் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு 25%த்தாலும், மாதாந்த மின் கட்டணங்கள் குறைக்கப்படுகின்றன. அவ்வாறே, விவசாய நடவடிக்கைகளுக்காக பகல் நேரங்களில் 45% கட்டணக் குறைப்பு விதிக்கப்பட்டுள்ளது.

## சுற்றுலாவுக்கான உலகில் மிகச் சிறந்த 3 நாடுகளில் இலங்கையும் ஒன்று


சுற்றுலா மேற்கொள்வதற்கான மிகச் சிறந்த மூன்று நாடுகளுக்கிடையில் இலங்கையும் இணைந்துள்ளது. கிரீஸ், மொரிசஸ், மற்றும் இலங்கை ஆகிய நாடுகள், 2024 கோடை கால சுற்றுலாவை மேற்கொள்வதற்கான உலகின் மிகச் சிறந்த நாடுகள் என 'போப்ஸ்' சஞ்சிகை குறிப்பிடுகின்றது. இலங்கை, நிரந்தரப் பசுமையான உயர் நிலங்களையும் கவர்ச்சிகரமான கடற்கரைகளையும் கொண்ட தீவாக இருப்பதுடன், பாலி தீவுகளுக்கு சமமாக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றது. அவ்வாறே, சுற்றுலாப் பயணிகளுக்கான சொகுசு வசதிகள் இலங்கையில் காணப்படுகின்றன. இலங்கையின் எழிலை இரசிப்பதற்கான 22 தேசிய வனப் பூங்காக்கள் காணப்படுகின்றன எனவும், 'போப்ஸ்' சஞ்சிகை சுட்டிக் காட்டுகின்றது. அவ்வாறே மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்தும், அண்மைக்கால சம்பவங்களிலிருந்தும் எழுச்சி பெற்றிருக்கும் இலங்கை இந்த ஆண்டில் சுற்றுலா மேற்கொள்வதற்கான சிறந்த நாடுகளிடையே முன்னணியில் உள்ளது எனவும் சஞ்சிகை சுட்டிக் காட்டுகின்றது.

(Cs-24312)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முறைகேடுகள்; தடுக்க மையங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 29

**அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் வன்முறைகள் மற்றும் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்காக மையங்கள் அடுத்தவாரத்துக்குள் நிறுவப்படவுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவிக்கையில்;

தேர்தல்தொடர்பானவன்முறைகள் மற்றும் தேர்தல் சட்டமீறல்களை கண்காணிப்பதற்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரின்கீழ்இந்தச்செயற்பாட்டுமையங்கள் இயக்கப்படவுள்ளன. முதலாவது மையம் கொழும்பில் அமைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல்வன்முறைகள்மற்றும்தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்காக மையங்கள் அமைக்கப்படும். அதேவேளை தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்க அரசமைப்பின்கீழ் தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது - என்றார். (ச-இ)

## பங்காளிக் கட்சிகளை சந்திக்கும் ஐ.ம.சக்தி

கொழும்பு, ஜூலை 29

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி எதிர்வரும் 8 ஆம் திகதி மலரவுள்ளதுடன், அன்றைய நாளில் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த விசேட சந்திப்பு குறித்த உடன்படிக்கை, ஜனாதிபதி தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளீட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஜீ.எல்.பீரிஸ், டலஸ் உட்பட மேலும் பல தலைவர்கள் மேற்படி சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர். (ச-44)

## நிதி தயார்

கொழும்பு, ஜூலை 29

தேர்தல் ஆணையாளரின் கோரிக்கைக்கு அமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான நிதியை வழங்க திறைசேரி தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தல் செலவுகளுக்காக 1000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## பெண் வேட்பாளர்கள் இம்முறை இல்லை?

கொழும்பு, ஜூலை 29

இலங்கை சனத்தொகையில் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருக்கின்றபோதிலும் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக இதுவரை எந்தவொரு பெண் வேட்பாளரும் முன்னிலையாகவில்லை எனத் தெரியவருகின்றது.

பிரதான அரசியல் கட்சிகளில் இருந்து ஆண் வேட்பாளர்களே களமிறக்கப்பட்டுள்ளனர்.

35 ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிட்ட 2019 ஜனாதிபதித் தேர்தலின்போது ஒரேயொரு பெண் வேட்பாளர் மட்டுமே போட்டியிட்டார்.

1994 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பிரதான இரு வேட்பாளர்களாக பெண்களே திகழ்ந்தனர். சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணியின் சார்பில் சந்திரிகா அம்மையாரும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஸ்ரீமா திஸாநாயக்க (காமினி திஸாநாயக்கவின் மனைவி) ஆகியோர் போட்டியிட்டனர். 1999 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா களமிறங்கினார்.

ஆனால் அதன்பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் பிரதான வேட்பாளர்களாகப் பெண்கள் களமிறக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

## சஜித் முன்னிலையாம் ஞானசாரதேரர் கணிப்பு



கொழும்பு, ஜூலை 29

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் இருக்கின்றார் என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கோத்தாபய ராஜபக்ச 69 இலட்சம் வாக்குகளை பெற்றவேளைகூட சஜித்துக்கு 55 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. சஜித்தால் தற்போது நடத்தப்படும் நிகழ்வுகளுக்குப் பெருந்திரளான மக்கள் வருகின்றனர். அவர் தன்னால் முடிந்தவற்றை வழங்குகின்றார். பஸ் இல்லாத பாடசாலையொன்றுக்கு அது கிடைக்கின்றதே என சந்தோஷப்படவேண்டும்.

குறைந்தபட்சம் இரு வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க விரும்புகின்றேன். ஏனெனில் நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி பிரதான சில தகவல்களை வெளியிட வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## மூன்றாகப் பிரிந்து மூவருக்கு ஆதரவு

### சு. க.வின் நிலைமை

கொழும்பு, ஜூலை 29

மூன்று அணிகளாகப் பிளவுபட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது ஜனாதிபதித் தேர்தலிலும் மூன்று வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கின்றது.

ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமால் சிறிபால டி சில்வா அணி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவுள்ளது. இதுதொடர்பான அறிவித்தல் நாளை மறுதினம் புதன்கிழமை வெளியிடப்படவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அணி, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு நேசக்கரம் நீட்டியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தலைமையிலான அணியினர், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக களமிறங்கவுள்ளனர். (ச-44)

## ஐ.ம.சக்தி எம்.பி. ரணிலின் பக்கம்



கொழும்பு, ஜூலை 29

ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் தலைமையில் காலியில் இடம்பெற்ற கூட்டத்தின்போது அவர் இந்த ஆதரவை வழங்கியுள்ளார். (ச-இ)

## ஏ.ஐ.தொழில்நுட்பத்தில் அநுர தேர்தல் பரப்புரை

கொழும்பு, ஜூலை 29

முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உதவியுடன் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் பரப்புரையில் களமிறங்கியுள்ளார்.

அதற்கமைய "akd.lk" என்ற புதிய இணையத்தளம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதனூடாக எந்தவொரு நபரும் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள முடியும். கட்சியிடம் கேட்க விரும்பும் எந்தவொரு கேள்வியையும் கேட்கலாம். செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் 'சாட் பாட்' அந்த சிக்கல்களுக்குத் தீர்வை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஆசியாவில் அரசியல் தலைவர் ஒருவர் தனது கொள்கைகளை முன்வைப்பதற்காக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தேர்தல் பணிக்கு விசேட வர்த்தமானி

கொழும்பு, ஜூலை 29

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான மற்றுமொரு விசேட வர்த்தமானி தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமிக்கும் வர்த்தமானியே ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 246

திங்கட்கிழமை
29 ஜூலை 2024

ஆடி 13
வள்ளுவர் ஆண்டு 2055





"கிரிக்கெட்டை வைச்சும் ரணிலார் லாபம் பார்ப்பார் கண்டியளோ"

## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29
பேருந்திலிருந்து இறங்கி நடந்து சென்றவரை வாகனம் இடித்துத் தள்ளியதில் காயமடைந்தவர் , மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்த நிலையில் உயிரிழந் துள்ளார்.

துன்னாலை கரவெட்டியைச் சேர்ந்த ராசன் பொன்ராசா என் பவரே இவ்வாறு உயிரிழந்துள் ளார். கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி, பஸ்ஸில் சகோதரி வீட் டுக்கு பளைக்குச் சென்றுள் ளார். முகமாலை யில் பஸ்ஸிலிருந்து ☞ 11

## ஆசிரியர் தாக்கியதால் ஆஸ்பத்திரியில் மாணவன் !

யாழ்ப்பாணம், ஜூலை 29
தெல்லிப்பழையிலுள்ள பாட சாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவன், ஆசிரியர் தாக்கியதாகத் தெரிவித்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் சேர்க்கப்பட் ☞ 11



## ஜெனிவா தீர்மானத்தை

# நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவு கோரி கடிதம்!

கொழும்பு, ஜூலை 29
இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கும் அதன் பொறுப் புக்கூறல் செயற்றிட்டத்துக்கும் அளிக்கப்பட்டுள்ள ஆணையை குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்கு நீடிக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடரில் முன்வைக்கப்படும் புதிய பிரே ரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு இலங்கையில் இயங்கிவரும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் மற்றும் சட்டத் தரணிகள் பேரவையின் உறுப்புநாடுகளிடம் கடிதம் மூலம் வலியுறுத்தி வருவதாக அறியமுடிகிறது. (அ–ஒ,இ)

## வன்முறைக் கும்பலால் வாகனத்துக்கு தீவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29
யாழ்ப்பாணம் மூர் வீதி யில் வீடொன்றின் முன் நிறுத்தி வைக்கப்பட்டி ருந்த வாகனத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு தீ வைத்து விட்டு, வன் முறை கும்பலொன்று தப்பிச் சென்றுள்ளது. இதுகுறித்து யாழ்ப்பா ணம் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ.ஒ.20)



## பொதுவேட்பாளர் விவகாரம்: உபகுழுக்கள் நியமிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29
தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள பொதுக் கட் டமைப்பு நேற்றைய தினம் கூடி ஆராய்ந்து உப குழுக் களை உருவாக்கியுள்ளன.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் விசேட கூட்டம் யாழ். நகரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடை பெற்ற போதே பொதுக் கட்டமைப்பின் அடுத்தகட்ட நடவ டிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து முக்கியமான சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ☞ 11

## யாழ். சிறைச்சாலையில் 74 இந்திய மீனவர்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 29
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வெவ்வேறு நாள்களில் கைதான 74 தமிழக மீன வர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 64 பேரின் வழக்குகள் நாளை செவ் வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன் றத்தில் மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. (அ-ஒ-66)

## அமலநாயகிக்கு ரி.ஐ.டி. அழைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 29
மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி அமலநாயகி இலங்கை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்ட ☞ 11

## இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி

# ஆசிய கிண்ணத்தில் வாகை; ஜனாதிபதி ரணில் வாழ்த்து

கொழும்பு, ஜூலை 29
ஆசிய கிண்ணத்தை வென்ற சமரி அத்த பத்து உள்ளிட்ட இலங்கை மகளிர் கிரிக் கெட் அணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க வாழ்த்துத் தெரிவித்தார்.

மைதானத்தில் வெற்றிக்கிண்ணத்துடன் நின்ற அணி தலைவி சமரி அத்தபத்துவுக்கு தொலை ☞ 11







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

இந்து ஆன்மீகப் பிரசாரகர் சங்கம் முன்னெடுக்கும் திருக்குறள் போட்டிக்காக அறநெறி மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம்–1 தொடக்கம் உயர்தரம் வரையுள்ள மாணவர்களை உள்ளடக்கிய 5 பிரிவுகளில், போட்டிகள் இடம்பெறவுள்ளன. இந்தப்போட்டிக்குரிய, ஒழுக்கம் சார்ந்த 151 திருக்குறள் உள்ளடங்கிய நூல், அறநெறிப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. திருக்குறள் புத்தகங்கள் கிடைக்காத ஆசிரியர்கள் 0765323624 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்களை 'வட்சப்' மூலம் பெற்றுக்கொண்டு, ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பருத்தித்துறை வீதி, குருகுலம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பிராந்திய அலுவலகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# நெடுவூர் திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை 29

"மீண்டும் ஊருக்குப் போகலாம் என்னும் தொனிப்பொருளில், நெடுந் தீவின் நிலைபேறான அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு மாபெரும் நெடுவூர் திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நெடுந்தீவில் இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமை பெற்றுள்ளன என்று ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. புலம்பெயர் நாட்டில் வசிக்கும் மக்கள் பங்களிப்புடன் நெடுந்தீவு மக்களும் இணைந்து, நெடுவூர் திருவிழாவை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

இந்தக் காலப்பகுதியில் விவசாயக் கண்காட்சி, மூலிகைக் கண்காட்சி, கல்விசார்ந்த காட்சி, உள்ளூர் உற்பத்தி, பாரம்பரிய விளையாட்டுகள், பாரம்பரிய உணவுக் கொண்டாட்டங்கள் போன்ற பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வு, இடம்பெறும் காலப்பகுதியில் இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து சேவைகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் கடல் பயணத்துக்கான படகு சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப–27)

# ஊர்மனைக்குள் புகும் யானைகள்

### தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

வன்னேரிக்குளம்- ஆனைவிழுந்தான் ஆகிய இரு கிராமங்களில் யானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இரவுவேளையில் அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்குச் செல்வதற்குக்கூட அப்பகுதிகளிலுள்ள மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

யானைகள் காடுகளிலிருந்து வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான் கிராமங்களை நோக்கிக் கூடுதலாக வருகின்றன. இதனைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

## காணி விற்பனைக்கு

K.K.S. றோட் மல்லாகம் (J-214) 2 1/4 பரப்பு
(பழைய சோடா கொம்பனி ஒழுங்கை அருகில்)
விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
(CS/54608) J-1
T.P: 077 753 2994

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 09 . 1987
இறப்பு 27 . 07 . 2024



### பாலரட்ணம் யூட் மோகன்ராஜ்

கண்டி வீதி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலரட்ணம் யூட் மோகன்ராஜ் நேற்று முன்தினம் (27.07.2024) சனிக்கிழமை மிருசுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலரட்ணம் மற்றும் தவமணிதேவி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நிர்மலராஜ், விமல்ராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.07.2024) திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டி வீதி,
மிருசிவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/55799) J-1

## 3ம் ஆண்டு நினைவு தினம்



மலர்வு : 05.05.1937
உதிர்வு : 26.07.2021

### அமரர். இலட்சுமிப்பிள்ளை நடராசா (தவமணி)

திதி: கிருத்திகை-29.07.2024

அம்மா நீங்கள் கண் முன்னே நிலவாக வாழ்ந்தீர்கள்
ஆனால் எம்மை தவிக்க விட்டுச்
செல்ல மனமிலாலாமல் சென்றீர்கள் அம்மா
அவை இன்றும் எம் மனக்கண்களில்
அழியாத கோலங்களாய் நிற்கின்றன
சம்பூரானின் சதியால் இழந்தோம் அம்மா
உங்களின் ஆத்மா நல்ல ஆண்மா
என்று யாவருக்கும் உணர்த்தினீர்கள் அம்மா
உங்களின் ஆன்மா சாந்தியடையட்டும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வீராங்கொடை ஞானவைரவ
கோவிலடி, தெல்லிப்பழை,
யாழ்ப்பாணம்.

என்றென்றும் உங்கள்
நினைவில்
திருமதி இரவீந்திரதாசன் சாந்தினி
குடும்பத்தினர்

(CS 1029) V-1

## இரண்டாம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு

தோற்றம் 12 . 07 . 1948
மறைவு 22 . 07 . 2022



கடந்த (22.07.2022) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர்
### திருமதி குமாரசாமி நாகரத்தினம் (ராணி)



விழிகளும் உன்னைத் தேட
விடியல் பல தனித்து ஓட
வழிகளும் ஏதும் உண்டோ
வையகம் நீ மீண்டும் காண......
ஆண்டுகள் இரண்டு போகும்
அகிலமும் உருண்டு போகும்
ஆயினும் உந்தன் அன்பு அகலுமா நெஞ்சை விட்டு..
என்றென்றும் எங்களுடன் இணைந்திருப்பீர் என
எண்ணிலாக் கனவுகள் கொண்டிருக்க
இடை நடுவில் காலன் பிரித்ததேனோ..
நீ கண்ட கனவுகளை எல்லாம் எம் தோளில் இறக்கி விட்டு
இறையடி சேர்ந்தாயோ கனவுகள் தீர்ந்ததென்று.
மறைந்த நாள் முதலாய் நிம்மதி இன்றி தவிக்கின்றோம்
மடியினில் மறுமுறை தலைசாய்த்திடமாட்டோமா என்று...
எண்ணிலடங்கா ஆசைகள் எல்லாம் ஏக்கங்களாய் மாற
என்னவள் உறங்கினாளோ எல்லையில்லா தூரம் சென்று...
மண்ணோடு உன் பூவுடல் சாய்ந்தாலும்
எம் மனதோடு என்றும் துளிர்விடும் உன் மாறாத நினைவுகள்.
விழிநீர் பூக்களால் உன் பாதம் தான் நனைத்து
விடியலை வேண்டுகின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய...

அன்னாரின் இரண்டாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (29.07.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CS/55789) J-1

இல. 209, புலவர் வீதி,
[illegible] வடக்கு, மானிப்பாய்

குடும்பத்தினர்
077 401 6184

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகளைப் பிளவுபடுத்தியதைப்போன்று, ஏனைய அரசியல் கட்சிகளை உடைத்தமையைப்போன்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவையும் பிளவுபடுத்த முயற்சிக்கின்றார் என ராஜபக்சக்களின் அரசியல் வாரிசான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச பகிரங்கமாக விமர்சித்துள்ளார்.

நாமல் ராஜபக்சவின் கூற்று முழுமையிலும் சரியானது. ரணில் விக்கிரமசிங்க என்ற தனிநபர் எப்போதும் பலமானவர் அல்லர். எதிரியை விட அவர் பலவீனமானவர்தான். இந்த உண்மையைத் தெரிந்துள்ள ரணில், எதிரியைத்தன்னைவிடப்பலவீனப்படுத்துவதன் ஊடாக தன்னைப் பலசாலியாக காட்டிக்கொள்பவர். காலாதிகாலமாக அதைத்தான் அவர் செய்து வருகின்றார். இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் அதைச் செய்யத்தான்போகிறார். ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலத்த பிரயத்தனங்களுக்கு மத்தியில் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரைத் தன்பக்கம் பிரித்து எடுத்துவிட்டார். சஜித்திடமிருந்து பொன்சேகாவை கழற்றி தனி வழியில் அலைய விட்டுவிட்டார். சுதந்திரக் கட்சி என்ற ஒன்றே இல்லாமல்போகுமளவுக்கு குட்டையை குழப்பிவிட்டிருக்கின்றார். தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் அநுர கோலோச்சினாலும், அங்கிருந்து சில பிரிவினரை உடைத்து வெளியே எடுத்திருக்கின்றார். இதன் ஓர் அங்கமாகவே சிறிலங்கா பொதுஜன பெரமுனவை உடைக்கும் கைங்கரியத்தை ரணில் முன்னெடுத்துள்ளார்.

பிரதமர் பதவியிலிருந்து 2022 ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச விலகிய பின்னர் அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்கு கொடுப்பதற்கு முக்கியமான காரணமாக இருந்தவர் மஹிந்தவே. அதேபோன்று கோத்தாபய தப்பியோடிய போதும், ரணிலை ஜனாதிபதியாக்குவதில் தீவிரமாக உழைத்தவரும் மஹிந்தவே. அன்றைய சூழ்நிலையில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் மக்கள் முன் தலைகாட்ட முடியாத நிலைமையே இருந்தது. அப்போது அவர்களுக்கு ஆபத்பாந்தவனாக இருந்தது ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். அவரை விட வேறு தெரிவில்லை. ஆனாலும் ரணிலின் குணம் மஹிந்தவுக்கும் தெரியும். காலத்தின் நிர்ப்பந்தத்தால் ரணிலுக்கு மொட்டு முட்டுக் கொடுத்தது. இப்போது அதற்காக அனுபவிக்கின்றனர்.

ரணில் செய்யும் 'பிளவுகளின் ஊடான பலவீனப்படுத்தும்' அரசியலை, ராஜபக்சக்களும் சில காலங்களுக்கு முன்னர் முன்னெடுத்திருந்தனர். இப்போது கதறும் நாமல் ராஜபக்ச, தனது தந்தை மஹிந்த ராஜபக்ச 2006ஆம் ஆண்டிலிருந்து என்னென்ன தில்லாலங்கடி வேலையெல்லாம் செய்து, எந்தெந்தக் கட்சிகளைக் கூறுபோட்டார்? சாம, தான, பேத, தண்ட வழிகளைப் பாவித்து யார் யாரையெல்லாம் தன் கைப்பிடிக்குள் கொண்டுவந்தார் என்பதை நினைவுகூர்ந்தால் நல்லது. கட்சிகளிலிருந்து ஆட்களை தம்பக்கம் வளைத்துப்போட்டு தம்மை மேலும் பலசாலியாக்கிக்கொண்டவர் மஹிந்தர். ஐக்கிய தேசியக் கட்சியை அதுவும் ரணிலிடமிருந்து பீரிஸ் தலைமையில் டசின் கணக்கானோரை 2006ஆம் ஆண்டு இழுத்தெடுத்தவரும் மஹிந்தவே. அப்போது செய்ததற்கு இப்போது ராஜபக்சக்கள் அனுபவிக்கின்றனர். அன்று அவர்கள் செய்யும்போது இனித்தது இப்போது அவர்களுக்கு நடக்கும்போது கசக்கின்றது.

காலம் மாறியிருக்கின்றது. வினை விதைத்தவர்கள் அதை அறுவடை செய்தே தீரவேண்டும். அதைத்தான் இப்போது ராஜபக்சவினர் பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.




## ஊழல் தடுப்புக்குத் தேவை சிறந்த பொறிமுறையே!



ரெலோ பேச்சாளர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 29**

**தேர்தல் காலங்களில் மாத்திரம் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்தை விவாதப் பொருளாகக் கையாண்டுவிட்டு, அந்த விடயங்களை கிடப்பில் போடுவது ஊழலுக்கு எதிரான கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அமையாது - இவ்வாறு ரெலோ இயக்கத்தின் பேச்சாளர் கு.சுரேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அரசாங்கத்தால் ஊழலுக்கு எதிரான தேசிய வேலைத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் சூழலிலேயே இந்நிகழ்ச்சித் திட்டம் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டத்தின் செயற்திறன் எந்த அளவு என்பது ஆராயப்படவில்லை. சம்பந்தப்பட்ட தரப்புகளும் பொது மக்கள் கட்டமைப்புகளும் ஒன்றிணைந்து ஊழலற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்தை செயற்படுத்தவேண்டும்.

தேர்தல் காலங்களில் மாத்திரம் விவாதப் பொருளாகக் கையாள்வதால் ஊழலைக் கட்டுப்படுத்த முடியாது- என்றார். (ச-27)

## அரச நிறுவனங்களும்; தேர்தல் விதிமுறைகள்

ஜனாதிபதித் தேர்தலின்போது அரச நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்த சுற்றறிக்கை அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்டு தேர்தலுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் தேர்தலின்போது அனைத்து அரச நிறுவனங்களும் உரிய விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளன. (ச-இ)

## பாடசாலை தரங்கள் 2025 இல் குறைப்பு

கல்வியமைச்சு தகவல்

2025 ஆம் ஆண்டின் முதல் தவணை நடைமுறைப்படுத்தப்படவுள்ள கல்வி சீர்திருத்த முன்மொழிவுகளின்படி, பாடசாலையின் தரங்களின் எண்ணிக்கை 13 இல் இருந்து 12 ஆகக் குறைக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. ஒவ்வொரு மாணவர்களும் 17 வயதுக்குள் பாடசாலை கல்வியை முடிக்கவேண்டும். புதிய சீர்திருத்தத்தின்கீழ் பரீட்சைகளுக்கு குறிப்பிட்ட சதவீதப் புள்ளிகளையும் வழங்கி, பரீட்சையை இலகுபடுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பாண் மோசடி சட்டம் பாயும்

கொழும்பு, ஜூலை 29

450 கிராம் பாண் ஒன்றின் விலையை 10 ரூபாவால் குறைக்கும் நடவடிக்கையுடன், விலையை காட்சிப்படுத்தாத கடைக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதற்காக விசேட சோதனைகள் நாடளாவிய ரீதியில் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்றும் அதன் தலைவர் டி.ஐ. உடுவர குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## டெங்கால் 32,078 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 29

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் நாட்டில் 32,078 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். இவ்வருடத்தின் இதுவரை 12 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

### நாளை

30.07.2024

செவ்வாய்க்கிழமை - ஆடி - 14

சுபநேரம் : 10.33 - 12.03

ராகுகாலம் : 03.03 - 04.33

2ஆம் ஆடிச் செவ்வாய்

### நாளொரு நல்வார்த்தை

**உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றி எதையுமே சாதிக்க முடியாது.**

- எமர்சன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 31 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும், 8 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ச-25, 159)

# 'மஹிந்த சிந்தனை' கொள்கை பேணுவேன்

## தம்மிக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

என்னால் அதிகம் விரும்பப்படும் பொருளாதாரக் கொள்கைத் திட்டம் மஹிந்த சிந்தனை கட்டமைப்பில் உள்ளது . ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு நான் முழுமையாக தயார். -இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார். மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் பயணிக்கக்கூடிய ஒருவரையே தமது கட்சி ஆதரிக்கும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச அறிவித்துள்ள நிலையிலேயே தம்மிக்க பெரேரா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு நான் முழுமையாக தயார். இலங்கையில் உள்ள பிரதான பெரிய கட்சிதான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியாகும். எனவே, அந்தக் கட்சியின் முடிவு அவசியம். எந்தவொரு முடிவையும் சந்தோஷமாக ஏற்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# தொழில்நுட்ப கற்கை விண்ணப்பம் கோரல்!

யாழ்ப்பாணம், ஜூலை 29

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் 'Advanced Certificate In Computer Application', 'Web Designing Level 1' ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் குறித்த விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரங்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 1.30 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் ஒப்படைக்கப்படவேண்டும். மேலதிக விரங்களை 021 2050 565, 077 2627 706, 07 22 78 890 ஆகிய இலக்கங்களூடாக பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-27,66)


## மணமகள் தேவை

பொலிகண்டி இந்து (V) 1979 இல் பிறந்த கேட்டை நட்சத்திரம் 4 இல் சூரியன் செவ்வாய் உடைய கடை உரிமையாளரான (விவாகரத்தான) **மணமகனுக்கு மணமகள் தேவை.**

**077 239 2624**

(CS/55797) J-1


# ஆண்டு நிறைவும் திறப்பு விழாவும்

யாழ்., ஜூலை 29

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் 114 ஆவது நிறுவுநர்தினம், அதிபர்கள் தினம், பரிசளிப்பு மற்றும் நுழைவாயில் வளைவு திறப்பு விழா ஆகியன வித்தியாலய முதல்வர் எம்.சீ. சுதாகரன் தலைமையில் வித்துவான் விருத்தாசலம் மண்டபத்தில் நாளை மறுதினம் 31 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினராக ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளரும், காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினர்களாக சமூகசேவகரானபழைய மாணவர் அ.சச்சிதானந்தன், முன்னாள் ஆசிரியை திருமதி யோகமணி சச்சிதானந்தன், கௌரவ விருந்தினர்களாக போஷகரும் பழைய மாணவருமான க.சபாநாயகம், சமூகநலன்விரும்பி இ.சிவபாதம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




அரசடி வீதி, யாழ்ப்பாணம்

**சாருகா பரமேஸ்வரன்**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டு கௌரவ யாழ் நீதிமன்ற நீதவான் அ.அ.ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் மல்லாகம் நீதிமன்ற உரை மொழி பெயர்ப்பாளரும், இலங்கை சட்டக் கல்லூரி இறுதி வருட மாணவியும், வேம்படி மகளீர் கல்லூரியின் பழைய மாணவியுமாவார்.

இவரை பல்வேறு நலன்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி

க.தர்மலிங்கம் JP
குடும்பத்தினர்.



## பெயர் மாற்றம்

இல, 170, உதயநகர் மேற்கு, கிளிநொச்சியில் வசிக்கும் **கந்தையா மாணிக்கவாசகர்** ஆகிய நான் எனது பெயரை **கந்தையா மயூரன்** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **கந்தையா மயூரன்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

**கந்தையா மயூரன்**

(CS/43001) J-1



## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

சிறப்பு
29 . 08 . 1940



இறப்பு
29 . 06 . 2024

அமரர் **உயர்திரு பொன்னுத்துரை சுந்தரலிங்கம்**

திதி : தேய்பிறை அட்டமி

கடந்த (29.06.2024) அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (29.07.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வகைகளில் ஒத்துழைப்பு நல்கிய அன்புள்ளங்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் உள்ளூரிலும், வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலமாகவும், பதாதைகள், சமூகவலைத் தளங்களிலும் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும், வெளியிட்டும், மலர்வளையம் சாத்தியும், இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. [illegible] கல்லூரி வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS/55793) J-1



## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுக்கு
22 . 06 . 1989



விண்ணுக்கு
29 . 07 . 2021

அமரர் **பாலசுப்பிரமணியம் செந்தூரன்**

(இசை ஆசிரியர்)

ஆண்டு மூன்று ஆனதய்யா எம்மை விட்டுப் பிரிந்து
தீராத துயரில் தவிக்கின்றோம் உறவுகள் நாம்
உங்கள் கள்ளமில்லாப் புன்சிரிப்பையும் நகைச்சுவைப்
பேச்சையும் எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றோம்
உங்கள் புகழும் நினைவுகளும் என்றும் அழியாது.
**ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பினை மீறி சட்டம் இயற்றமுடியாது

ம. உ. ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 29**

**அரசமைப்பு நாட்டின் உயர்சட்டமாக கருதப்படுகின்ற நிலையில் நாடாளுமன்றம் அரசமைப்பை மீறி சட்டம் இயற்றமுடியாது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மனித உரிமைகள் பாது காவலர்களுக்கான செயல் அமர்வில் வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதியின் பதவிக்காலம் அரசமைப்புக்குட்பட்டே இடம் பெறும். அரசமைப்பு நாட்டின் உயர்சட்டமாக காணப்படுகின்றது. அரசமைப்பை மீறி நாடாளுமன்றம், அதாவது நிர்வாக துறைச் சட்டங்களை இயற்ற முடியாது.

குற்றவியல் சட்டத்தின்கீழ் கைதுகள் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட வேண்டும். கைதுக்கான காரணம், கைது செய்த இடம் போன்றவை தெளிவாகக் குறிப்பிடப்பட்டு படிவம் வழங்கப்பட வேண்டும்.

மக்களின் உரிமைகளைப் பாது காக்கவும் சட்டத்தின் ஆட்சியை நிறைவேற்றுவதற்கும் நாடாளுமன்றம் அரசமைப்பை மீறி சட்டம் இயற்றமுடியாது - என்றார். (ச-27-20)

## தீவககல்விவீழ்ச்சி; தீர்வுகள் ஆராய்வு!

கிளிநொச்சி, ஜூலை 29

தீவகத்தின் கல்வித்தர வீழ்ச்சியை மேம்படுத்த தீவக பிரதேச கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு துறைசார் அதிகாரிகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது தீவகப் பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறித்தும் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான ஏதுநிலைகள் குறித்து இருதரப்பினராலும் ஆராயப்பட்டன. (ச-27)

## 'கள்' விற்பனை மக்கள் எதிர்ப்பு!

பூநகரி-சின்னப்பல்லவராயன்கட்டுச் சந்தியில், கள் விற்பனை நிலையம் ஒன்று புதிதாக அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், குறித்த முயற்சிகளுக்கு சின்னப்பல்லவராயன் கட்டு கிராம மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே, சின்னப்பல்லவராயன்கட்டு கிராமத்தில் கசிப்பு உற்பத்தியால் குடும்ப வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அதுமட்டுமன்றி, குறித்த சந்தியில் 'கள்' விற்பனை நிலையம் இயங்கினால் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும், இரவு வேளைகளில் வேலைக்குச் சென்று திரும்பும் பெண்களுக்கும் பாதுகாப்பற்ற நிலைமைகள் உருவாகும். எனவே மக்கள் நடமாட்டம் குறைந்த வேறொரு இடத்தில் 'கள்' விற்பனையை இயங்கவைக்கவேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-13)



## கஞ்சாவை டிப்பரில் கடத்தியவர் கைது!

யாழ்ப்பாணத்தில் இருந்து டிப்பர் வாகனத்தில் கஞ்சா போதைப்பொருளைக் கடத்திச் சென்ற நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி- பூநகரிப் பகுதியை நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்தை சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டனர்.

டிப்பர் வாகனத்தினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20கிலோ 485கிராம் கஞ்சா போதைப்பொருளை பொலிஸார் மீட்டனர். அத்துடன் டிப்பர் வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்தனர். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம், மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருள் என்பவற்றுடன் கைது செய்யப்பட்ட நபர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ச-20)

## முன்பதிவு கட்டாயம்

கொழும்பு, ஜூலை 29

கடவுச்சீட்டுக்கு முன்பதிவுசெய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே குடிவரவு , குடியகல்வு திணைக்களத்தின், தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்குச் செல்லவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முன்பதிவு செய்யாமல் செல்வதைத் தவிர்க்குமாறு குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்பதிவு செய்தவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்படும். அடுத்த ஆண்டு முதல் பாதுகாப்பான புதிய இணையவழி மூலம் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு, நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-இ)

## 11,261 கடைகளுக்கெதிராக ஆறு மாதங்களில் வழக்கு

கொழும்பு, ஜூலை 29

கடந்த ஆறு மாதங்களில் நாடளாவிய ரீதியில் மனித பாவனைக்கு தகுதியற்ற உணவுகளை விற்பனை செய்த 11 ஆயிரத்து 261 கடைகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உணவின் பொருள்கள் மற்றும் உணவின் காலாவதி திகதி குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## தினம் தெரியுமோ?

**கட்டுடை அக்சிடெண்டில நடந்த இன்னொரு விசயத்தைப் பற்றி இண்டைக்குப் பாப்பம்.**

**ஹைஏஸ் வாகனத்தின்ர 'வெறியாட்டத்தில' அருமந்த உயிர் ஒண்டு அநியாயமாப் போட்டுதெண்டும், அந்த வாகனத்தை ஓடின ஆளை விட்டிட்டு வேற ஆளை அரஸ்ட் பண்ணி, கேஸை மாத்த பொலிஸ் வெளிக்கிடுதெண்டும் சனத்துக்கு கடும் கோபம் வந்திட்டுது. அதோட செத்த பொம்பிளையின்ர ஊர்க்காரரும் பொலிஸ் ஸ்ரேசனடியில குவிஞ்சுட்டினம். 'உண்மையான குற்றவாளியக் கைது செய்யோணும்' எண்டதுதான் அவையின்ர கோரிக்கை. இப்பிடி நூற்றுக்கணக்கான ஆக்கள் மானிப்பாய் பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்னால அண்டைக்கு சாமம் தாண்டியும் நிண்டவை.**

**இந்த நேரத்திலதான் திடீரெண்டு சண்டிலிப்பாய் பக்கமிருந்து ரண்டு மோட்டர் சைக்கிள்களில நாலுபேர் முறுக்கிக் கொண்டு வந்திருக்கினம். வந்தவை சும்மா வரேலை. சூரன் வந்த மாதிரி கையில வாளுகளோட வந்தவரத்தில 'ஹைஏஸில வந்து அக்சிடெண்ட் பண்ணினவங்களின்ர ஆக்கள் தான் எங்களைக் கலைக்க வாளோட வாறங்கள் போல' எண்டு அங்க நிண்ட சனங்கள் குழம்பத்தொடங்கிட்டுது. அப்பிடி வாளோட வந்தவங்களும், சொல்லி வைச்சமாதிரி பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்னுக்கே 'ஸ்லோ' பண்ணி, மோட்டர் சைக்கிளை நிப்பாட்ட. 'என்னவோ அசம்பாவிதம் நடக்கப் போகுது' எண்டு சனமும் அதுக்கு ரெடியாகத் தொடங்கிட்டினம். மோட்டர் சைக்கிளில இருந்து இறங்கின ஒருத்தன், வாளோட இறங்கி நடக்க, சனத்தைக் கட்டுப்படுத்திற அலுவலைப் பார்த்த பொலிஸ்காரர் பிடரியில கால் அடிபட உள்ளுக்க ஓடிட்டார். அதைமாதிரி வாசலில் சென்றிக்கு நிண்ட பொலிஸையும் திடீரெண்டு காணேலை. எல்லாப் புகழும் வாளுக்கே. அதுக்குப் பிறகு சனம் பொறுப்பதிகாரிக்கு போனுக்கு மேல போன் அடிக்கத்தான், உள்ளுக்க இருந்து ஒரு குரூப்பா பொலிஸ்காரர் வந்திருக்கினம். அதுக்குள்ள வாளோட நடந்துபோனவன், மற்ற மோட்டர் சைக்கிளில ஏறிப்போட்டான். இன்னொருத்தன் மோட்டர் சைக்கிள் 'கிக்கரை' அடிக்கிற அலுவலில நிக்க, ஆளைப் போய் பொலிஸ் அப்பிப் பிடிச்சிட்டுது.**

**அதுக்குப் பிறகுதான் உண்மையான விசயம் வெளியில வந்திருக்குது. வாளோட வந்த நாலு பேரும் சண்டிலிப்பாயில , பழைய கறளைத் தீர்க்கிறதுக்காக ரண்டுபேரை வெட்டித்தள்ளிப்போட்டு, பறந்து வந்திருக்கினம். அவங்களுக்கும் அக்சிடெண்டுக்கும் சம்பந்தமில்லை. ஆனால் தெரியாத்தனமா அந்த இடத்தால வரேக்க, அவையின்ர கஷ்டகாலத்துக்கு ஒரு மோட்டர் சைக்கிளில பெற்றோல் முடிஞ்சிட்டுது. அதாலதான் அது பொலிஸ் ஸ்ரேசனடியில நிண்டிருக்கு. அதைத்தான் சனம் தங்களைக் கலைக்க வாறாங்களாக்குமெண்டு நினைச்சவை. பொலிஸ்காரர் அந்த பெற்றோல் இல்லாமல் நிண்ட மோட்டர்சைக்கிளையும், 'கிக்கர்'அடிக்கிறதிலயே குறியா இருந்தவரையும் பிடிச்சு உள்ளுக்க போட்டிருக்கினம். வாள்வெட்டுக்காரருக்கு எதிரா பெற்றோலும் சதி செய்யுது பாத்தியளோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## பழனிப்பிள்ளை சிவன்செயல் (ராசா)

(ராஜன் ஒலி, ஒளி அமைப்பு உரிமையாளர்,
பிரபல மெக்கானிக்)



பிறப்பு
01.12.1949

இறப்பு
28.07.2024

K.K.S. சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் கற்பக்குனை கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட பழனிப்பிள்ளை சிவன்செயல் (ராசா) - (ராஜன் ஒலி, ஒளி அமைப்பு உரிமையாளர், பிரபல மெக்கானிக்) அவர்கள் நேற்று (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

பழனிப்பிள்ளை - பருவதம் தம்பதியரின் பாசமிகு மகனும் நல்லதம்பி- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அற்புதம் (தேவி)யின் பாசமிகு கணவரும் இரத்தினகுலசிங்கத்தின் பாசமிகு தம்பியும் அமரர் மனோன்மணி, அருமைத்துரை மற்றும் அன்னரத்தினம், சுசிலாதேவி, ரஞ்சினிதேவி ஆகியோரின் மைத்துனரும் நயனிதேவி, ராகினி (ஆசிரியர்- ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம்), இராஜேஸ்வரன் (வவாக்குட்டி- ராஜன் ஒலி, ஒளி அமைப்பாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிகரன் (பிரதேச செயலகம்- தெல்லிப்பழை), தாரணி ஆகியோரின் மாமனாரும் திவியன், பிரிதா, சிபிசன், பகிதன், பிரவின், சபரீஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2024) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கந்தரோடை சங்கம்பிளவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கற்பககுனை, கந்தரோடை,
சுன்னாகம்**

**தகவல்: குடும்பத்தினர்
0774722780
077 5329802**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடிமனைக்குள் முதலைகள்

## பீதியில் மக்கள்



கிளிநொச்சி, ஜூலை 29

கடும் வறட்சிநிலையான காலநிலையால் குளங்கள் வற்றுவதையடுத்து கிளிநொச்சி - அக்கராயன் பகுதிகளில் முதலைகள் குடிமனைக்குள் புகுகின்றன. இதனால் பெரும் அச்சத்துடன் வசிக்கவேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வன்னேரிக்குளம்- ஐயனார்புரம் பகுதியிலுள்ள கிராமத்தில் தற்பொழுது சில தினங்களாக முதலைகள் மக்கள் குடியிருப்புப் பகுதியில் புக்கின்றன. இதனால் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் தமது நாளாந்தக் கடமையை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளன என்றும் மக்கள் அச்சம்வெளியிட்டுள்ளனர். (ச-113)







18 வயது பெண்களுக்கான மாகாணமட்ட வலைப் பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரியை வீழ்த்தி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாகாணமட்ட சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது. (ச-555)

## குளங்கள் ஆக்கிரமிப்பு சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு

### முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 29

குளங்களை ஆக்கிரமித்து அதன் பரப்பளவைக் குறைத்து வருகின்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் மிகப்பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரு மான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தற்போது உலகம் மிகப்பெரும் பருவநிலை மாற்றத்துக்கு முகங்கொடுத்துள்ளது. நீருக்காக மக்கள் அலைந்து திரிகின்றார்கள், வறட்சி காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். நிலத்தடி நீர் வேகமாக வற்றிச் செல்கிறது. இவ்வாறான நிலைமைகள் காரணமாக மிக மோசமான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை உணர்ந்து எமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட குளங்களைப் பாதுகாக்க வேண்டியது எங்கள் அனைவரினதும் மிகப்பெரிய பொறுப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-214)

## வரலக்ஷ்மி விரத வழிபாடு

யாழ்ப்பாணம் , ஜூலை 29

வரலக்ஷ்மி விரத வழிபாடு புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர்தேவஸ்தானம்பருத்தித்துறைசிவன்கோவிலில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

வரலக் ஷ்மி விரதத்தை முன்னிட்டு மாங்கல்ய பூசை, தீப பூசையில் கலந்துகொள்ளும் விரதகாரர்கள் அவர்களுடைய பெயர், நட்சத்திரங்களை ஆலய காரியாலயத்தில் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 226 4001 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-22,100)

## அராலி சரஸ்வதி வாகை

யாழ்ப்பாணம், ஜூலை 29

மாகாணமட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரியின் 16, 18, 20 வயதுப் பிரிவினருக்கான மூன்று அணிகளும் இரண்டாம் இடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளன.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக் கிழமை இந்தப் போட்டி இடம்பெற்றது. (ச-555)

## அரச இயந்திர ஆதரவுடனேயே வன்முறைகள் அரங்கேறின!

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக தமிழ்மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயல்களை நினைவுகூருகின்ற வாரத்தை நாம் கடைப்பிடிக்கின்றோம். அரச இயந்திரங்களின் நிகழ்ச்சி நிரலிலேதான் இந்த வன்முறைகள் காலத்துக்குக்காலம் நடைபெற்று வந்திருக்கின்றன.

- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தவாரம் முழுவதும் நாங்கள் கறுப்பு ஜூலை என்று அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறோம்.

பல காலமாக, பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் நடத்தப்பட்டு வந்து இறுதியிலே 83ஆம் ஆண்டு மிக மிக மோசமான வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது.

அரச இயந்திர நிகழ்ச்சிநிரலிலே தான் இந்த வன்முறைகள் காலத்துக்குக்காலம் நடைபெற்று வந்திருக்கின்றன. இந்த அரச நிகழ்ச்சிநிரலிலே தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தை அழிப்பது ஒரு பெரிய பிரதான பங்காக இருந்திருக்கிறது- என்றார். (ச-27,20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லூர் பெருந்திருவிழா களைகட்டும் ஏற்பாடுகள்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு அலங்காரப் பந்தல்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச–66)



## பரிசோதகர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம் ஜுலை 29

வடக்கு-கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த, மேற்பார்வைப் பரிசோதகர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி, களுத்துறையிலமைந்துள்ள தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவகத்தில் அண்மையில் நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களைச்சேர்ந்த மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வை செய்யும் தரத்தையும் நுட்பங்களையும் மேம்படுத்தும் நோக்குடன் இந்த முகாமைத்துவப் பயிற்சி நெறி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறியில் 48 மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சமுதாய மருத்துவ நிபுணர்கள், மருத்துவ அத்தியட்சகர்கள், பதிவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-9)

## மரண அறிவித்தல்

### திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற களஞ்சியக் காப்பாளர், ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி)



இடைக்காடு அச்சுவேலியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி கடந்த வியாழக்கிழமை (25.07.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் லோக நாயகி, லோசனா(Swiss), கிரிவேல்(பொது முகாமையாளர், ப. நோ. கூ. ச, அச்சுவேலி), சோதிவேல் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் குஞ்சிதபாதம், ஆறுமுகவேல் (சுவிஸ்), சிவசுதனி (ஆசிரியர், யா/கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை), கோமகள் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனரும்,, நரேனின் பெரியதந்தையும், லக்ஷாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்) பங்கஜன். (ஆசிரியர், யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்), அபிஷான் (சுவிஸ்), அபினாஷ்(சுவிஸ்) பிரகாஷ்,(சுவிஸ்), சாகித்தியன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆருத்தியன் (யா/கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை), சாருக்தியன்( யா/கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை), லக்ஷிமிகா(கனடா), தாமிரன் (கனடா) கௌசிகன் (.அபிவிருத்தி உத்தியோகத்தர் கண்டாவளை பிரதேச செயலகம்), சஞ்சிகா (வ/ பெரியகுளம் அ. த. க. பாடசாலை ) ஆகியோரின் பேரனும் தன்விகாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (30.07.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு, சாமித்திடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இடைக்காடு,
அச்சுவேலி

தகவல்: கிரிவேல் (மகன்) 0771063311
சோதிவேல் (மகன்) 001 416 4560259



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வாராந்த நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் அண்மை யில் இடம்பெற்றது. (ப-66)


## வீதி அதிகார சபையின் தலைவர் பதவி விலகல்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சி. பி. அத்துலுவகே பதவி விலகல் செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் தன்னிச்சையான தலையீடு காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (ச–இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 • 04 • 1944



மறைவு
26 • 07 • 2024

### அமரர் சின்னத்தம்பி செல்லையா (போமன் செல்லையா)

ஓய்வு நிலை உத்தியோகத்தர் (மின்கம்பி இடுபவர் (LINES MEN)
மின்சாரப் பகுதி மாநகரசபை யாழ்ப்பாணம்

சாவகச்சேரி மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லையா கடந்த 26.07.2024 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, வேலாயுதம் (ராசன்), பாலசிங்கம் மற்றும் குமாரசாமி, தங்கமணி செல்லம்மா, மகாலிங்கம் (சின்னக்கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பாலறஞ்சினி (பாலா), நிமலினி (நிமால்), மற்றும் பாலேந்திரா (ஜேர்மனி), சுவர்ணலதா (சுவர்ணா) (பிரான்ஸ்), செல்வரஞ்சினி (யூலி) (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிதரன் (ஜேர்மனி), டயானி (ஜேர்மனி) குலசேகரம் (பிரான்ஸ்), பன்னீர்ச் செல்வன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அக்ஷயா அஜன் ஆராதனா அஞ்சனா, தனுஷன், அன்னியா, அருண் அவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2024) செவ்வாய்க்கிழமை மட்டுவில் கிழக்கு அவரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனகிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு 11.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மோகனதாஸ் வீதி
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
075 183 2074



புலோலி வடக்கு மருதடி குருமணல் அருள்மிகு கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு பக்தர்கள் காவடி எடுத்து நேர்த்திக்கடனை நிறைவேற்றியுள்ளனர். பருத்தித்துறை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து காவடி எடுத்து வந்த பக்தர்கள் தும்பளை வீதியூடாக மெத்தக்கடை சந்தியை அடைந்து, அங்கிருந்து பருத்தித்துறை பிரதான வீதியூடாக மருதடி கந்தசுவாமி ஆலயத்தை சென்றடைந்து தமது நேர்த்திக் கடனை நிறை வேற்றினர். (ச–22,100)

## ஏமன் விமான நிலையத்தில் அமெரிக்கா தீவிரத் தாக்குதல்

சனா, ஜுலை 29

ஏமன் விமான நிலையம் மீது அமெரிக்கா நேற்றுமுன்தினம் மிகக் கடுமையான வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

காஸாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் இனப்படுகொலையை நிறுத்துமாறு வலியுறுத்தியும், இஸ்ரேலுக்கு எதிராக ஹவுத்தி தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருகின்றது. ஹவுத்தியின் பிரதான செயற்பாட்டுத் தளமாக ஏமனே காணப்படுகின்றது. ஏமனின் தலைநகர் சனாவைக் கைப்பற்றவேண்டும் என்பதுதான் ஹவுத்தியின் பிரதான கொள்கை. இந்த நிலையில், ஹவுத்தியின் கட்டுப்பாட்டிலுள்ள ஏமன் விமான நிலையத்தின் மீதே அமெரிக்காவால் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஏமனின் ஹுடைடா நகரில் உள்ள விமான நிலையம் மீது இந்த வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. அதேபோல், ஏமனின் கமரன் தீவில் உள்ள ஹவுத்தியின் தளங்கள் மீதும் அமெரிக்கா, இங்கிலாந்து இணைந்து வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை.

தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதை ஏற்றுக்கொண்டுள்ள ஹவுத்தி, யூதப் பயங்கரவாதத் தமது ஆதரவானவர்களால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளியின் உடல் வவுனியாவில் நேற்று நல்லடக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கடந்த வியாழக்கிழமை உயிரிழந்த முன்னாள் போராளியும், இளம் அரசியல், சமூகச் செயற்பாட்டாளரும், ஊடகவியலாளருமான அ.சேகுவராவின் (இசைப்பிரியன்) இறுதி நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றன.

வவுனியாவில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் கிரியைகள் ஆரம்பமானதைத் தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வவுனியா கந்தன்குளம் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் இறுதி நிகழ்வில் ஊடகவியலாளர்கள், வவுனியா காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தைச் சேர்ந்த தாய்மார்கள், முன்னாள் போராளிகள், அரசியல் சமூகப் பிரதிநிதிகள், உறவுகள் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போராளிகள் நலன்புரி அமைப்பைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் இறுதி நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். (அ.ஓ.66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும். பொறுமை அவசியம். ஒரு சிலருக்கு தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும். நன்மைகள் அதிகரிக்கும்.

**கடகம்:** காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக் கூடும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். காரியம் அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவுகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தேவையற்ற வீண்செலவுகள் மனதை சஞ்சலப் படுத்தும். சிரமங்கள் குறையும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சி தரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். கடன் திரும்பக் கிடைக்கக்கூடும். சிலருக்குஎதிர்பாராதபணவரவுக்குவாய்ப்புஉண்டு. விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

**விருச்சிகம் :** உற்சாகமான நாள். திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். காரியம் அனுகூலமாக முடியும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு புதிய உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சியே உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியம் அனுகூலமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

## விபத்தில்...

இறங்கி நடந்துசென்றபோது பின்னால் வந்த வாகனம் அவரை இடித்துத் தள்ளிவிட்டு நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளது. படுகாயமடைந்த நிலையில் அவரை பொலிஸார் பளை மருத்துவமனையில் சேர்த்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் நேற்று உயிரிழந்தார். எந்த வாகனம் அவரை இடித்ததென்று தெரியவராத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஓ,26)

## ஆசிரியர்...

டுள்ளான். மாணவனை கடந்த வியாழக்கிழமை ஆசிரியர் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பெற்றோர் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். மாணவன் காதுப் பகுதியில் வலி இருப்பதாகத் தெரிவித்து போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளான். பேனா ஒன்றை நிலத்திலிருந்து மேற்படி மாணவன் எடுத்ததாகவும், அந்தப் பேனா எப்படி வந்தது என்று கேட்டே ஆசிரியர் தாக்கியதாகவும் பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஓ,27)

## அமலநாயகிக்கு...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத் தலைவி அ.அமலநாயகியின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அழைப்பாணைக் கடிதத்தை வழங்கியுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை முற்பகல்10 மணியளவில் கல்லடியில் அமைந்துள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் மட்டக்களப்பு அலுவலகத்துக்கு விசாரணைக்கு வருமாறு அவர் அழைக்கப்பட்டுள்ளார். (அ-ச-66)

## பொதுவேட்பாளர்...

இந்தச் சந்திப்பு தொடர்பாக சிவில் சமூகப் பிரதிநிதியும் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினருமான அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது..

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

இதன்போது பொதுவேட்பாளரை நிறுத்துவது குறித்தான பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்திருக்கிறோம்.

அதாவது இந்தப் பொதுக் கட்டமைப்புக்கு கீழ் வரக்கூடிய உப கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. வேட்பாளர் யார் என்பதை தெரிவதற்கும், தேர்தல் அறிக்கையை தீர்மானிப்பதற்கும், கட்சி சின்னத்தை தீர்மானிப்பதற்குமான உபகட்டமைப்புகள் நிதி மற்றும் பரப்புரை நடவடிக்கைகளுக்கான உபகட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் உரிய கட்டமைப்புகளால் உரிய நேரத்தில் அந்தந்த விடயங்கள் தொடர்பில் அறிவிக்கப்படும்- என்றார். (அ-ஓ-20)

## ஆசிய...

பேசியில் தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

"உங்களுடைய தோல்வியற்ற பயணத்துக்கு உங்கள் திறமை, அர்ப்பணிப்பு மற்றும் கூட்டு செயற்பாடு சான்றாக அமைகிறது. நீங்கள் எமது நாட்டை கௌரவப்படுத்தியுள்ளீர்கள்" என ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

ஆசியக் கிண்ண மகளிர் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில் இந்திய அணியை இலங்கை அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-இ)

## செல்வச் சந்நிதியானுக்கு ஓகஸ்ட் 4 இல் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற் சவம் எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஓகஸ்ட் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பூங்காவனமும், ஓகஸ்ட் 14 ஆம் திகதி புதன்கிழமை 11 ஆம் திருவிழாவான கைலாசவாகனத் திருவிழாவும் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 19 ஆம் திகதி ஞாயிற்றுகிகழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும், 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆவணி மாதம் பூரணை தினத்தில் தீர்த்த திருவிழாவும் நடைபெற்று அன்று மாலை 6.30 மணியளவில் மௌன திருவிழா நடைபெறும். 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொண்டர் பூசை விழா நடைபெற்று வருடாந்த மஹோற்சவம் நிறைவடைகிறது. (ச-100)

## வட்டூர் கண்ணகிக்கு ஆடிப்பூர அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேகம், எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

விநாயகர் வழிபாடு, சங்குபூசை, விஷேட ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனையைத் தொடர்ந்து, காலை 9 மணிக்கு பிரதான கும்பங்களின் வீதியுலா இடம்பெறும். தொடர்ந்து மு.ப. 11 மணிக்கு அம்மனுக்கு பூரகர்ம (ருதுசாந்தி வைபவம்) நடைபெறும். இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையையடுத்து திருவூஞ்சல் உற்சவம் நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் "துர்க்காபுரம்"

## அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான ஆடிப்பூர அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் - 2024

ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!

தன்னை நம்பி வழிபடும் அடியார்களை காலந்தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் "துர்க்காபுரம்" என்னும் ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனுக்கு குரோதி வருடம் பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற எல்லாம் வல்ல அம்பிகை திருவருள் ஈர்ந்துள்ளார். ஆடி மாதம் 13ம் நாள் (29.07.2024 ) திங்கட்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 20ம் நாள் ( 05.08.2024 ) திங்கட்கிழமை சப்பரம். வேட்டைத்திருவிழா (06.08.2024) ஆடி மாதம் 21ம் நாள் செவ்வாய்க்கிழமை தேர் ஆடி மாதம் 22ம்நாள் ( 07.08.2024 ) புதன்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும்.( 06.08.2024 ) தேர்த்திருவிழா அன்று ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள்

ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின்மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும். தினமும் காலை 10.00 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம். பூஜை. வசந்தமண்டப பூஜை. அம்பாள் வீதியுலாவும். மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) இடம் பெறும்.

**உற்சவகால விபரம்**

**01ம் நாள் 29.07.2024 திங்கட்கிழமை தர்மத்துவஜ கொடியேற்றம்**
**09ம் நாள் 06.08.2024 செவ்வாய்க்கிழமை, தேர்த்திருவிழா**
**10ம் நாள் 07.08.2024 புதன்கிழமை தீர்த்தத்திருவிழா, ஆடிப்பூரம்**

"துர்க்காபுரம்"
படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.

இங்ஙனம்
ஆலய தர்மகர்த்தா

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 04 . 1952



மறைவு 28 . 07 . 2024

### செல்வராணி பாலச்சந்திரன்

செல்வராணி பாலச்சந்திரன் நேற்று (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் (வைரக்கனகர்) - மரகதம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னையா பாலச் சந்திரன் அவர்களின் மனைவியும், பாலச்சந்திரன் கேதீசனின் (சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியல் பீடம் - யாழ் பல்கலைக்கழகம்) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், தெட்சணாமூர்த்தி, தங்கேஸ்வரி, சந்திரசேனன், மற்றும் புவனேஸ்வரி, சரோஜினி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் சற்குணலிங்கம் ஆகியோரின் சகோதரியும், சுஜித்ராவின் மாமியாரும், ஷாத்வியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2024) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**மகன் - பாலச்சந்திரன் கேதீசன்**
**077 719 4463**
**021 222 4831**

49, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS/55800) J-1

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

**சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்**

தொடர்புகளுக்கு:

**074 173 7684**

(CS/988) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து (V), கௌரவ குடும்பம், 1978 கேட்டை நட்சத்திரம், 11 சூரியன், செவ்வாய் சுயதொழில் (பிஸ்னஸ்) செய்யும் **மணமகனுக்கு மணமகள் தேவை.**

**075 617 8008**

(CS/1030) J-1

## SCIENCE PERAL

(யாழ். பெருமாள் கோயில் முன்)

**A/L Physics**

ஆசிரியர் திரு. M.ஸ்பெல்மன் (BSc, PGDE)

**A/L 2026 பொறியியல்**
ஆரம்பம் - 31.07.2024 புதன்கிழமை 4.00 Pm
(திங்கள், புதன், வெள்ளி. 4.00 p.m - 5.00 pm)

**A/L 2025 அலைகளும் அதிர்வுகளும்**
ஆரம்பம் - 31.07.2024 புதன்கிழமை 5.00 Pm
(திங்கள், புதன், வெள்ளி. 5.00 p.m - 6.00 pm)

**A/L 2024 PAPER CLASS**
ஆரம்பம் - 31.07.2024 புதன்கிழமை 6.00 Pm
(திங்கள், புதன், வெள்ளி. 6.00 p.m - 8.00 pm)

- Group Class ஆக எடுக்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
- Term Exam ற்கு ஏற்ப உரிய காலத்தில் பாடத்திட்டம் முடிக்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனம் எடுக்கப்படும்.
- HAC Tution Center, சித்தன்கேணியிலும் Physics Class நடைபெறுகிறது.
- (Zoom இல் எடுக்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்).

தொடர்புகளுக்கு : நிர்வாகி : 077 703 1125
ஆசிரியர் : 077 611 6724

(CS/28566) J-1

## வேலையாட்கள் தேவை


சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் இரும்புக்கடை ஒன்றிற்கு உதவியாளர், சிட்டை எழுதுபவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

**076 007 8009**

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 . 05 . 1933



மறைவு 01 . 08 . 2021

### அமரர் கார்த்திகேசு குணரத்தினம்

**(Retired Asst. Director of Agriculture, North - East Province, Sri Lanka. National Consultant UN/FAO, Sri Lanka)**

(முன்னாள் தேசிய கரப்பந்தாட்ட வீரர் - இலங்கை, சமூகசேவையாளர்)

திதி : 29.07.2024

**எங்களின் இதய தெய்வமே!**
**ஆண்டு மூன்று சென்றாலும் - உம்**
**நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை**
**எங்கள் நெஞ்சமதில் நிறைந்திருக்கும்**
**அன்புத் தெய்வத்தின் பொற்பாதத்தில்**
**மலர்தூவி அஞ்சலி செய்கின்றோம்**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.**

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சிட்னி, அவுஸ்திரேலியா.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org